V. GOVERNMENT BILLS.

(1) THE HOLDINGS (STAY OF EXECUTION PROCEEDINGS) (MADRAS AMENDMENT) BILL, 1961.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I move—

"That leave be granted for the introduction of the Holdings (Stay of Execution Proceedings) (Madras Amendment) Bill, 1961."

DEPUTY SPEAKER : The question is—

"That leave be granted for the introduction of the Holdings (Stay of Execution Proceedings) (Madras Amendment) Bill, 1961."

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI M. A. MANICKAVELU : I introduce the Bill, Sir.

DEPUTY SPEAKER : The Bill is introduced.

(2) THE MADRAS CO-OPERATIVE SOCIETIES BILL, 1961 (L.A. BILL NO. 22 OF 1961).

* THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I beg to move—

"That the Madras Co-operative Societies Bill, 1961 (L.A. Bill No. 22 of 1961) as amended by the Select Committee be taken into consideration."

உதவி சபாநாயகர் அவர்களே, இந்தக் கூட்டுறவுச் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்ற எண்ணம் நீண்ட காலமாக நம்முடைய சட்டசபையில் இருந்து வந்திருக்கின்றன. அதற்கான முயற்சிகள் நான்கைந்து ஆண்டுகளாக எடுக்கப்பட்டு வந்திருக்கின்றன. முக்கியமாக இந்தச் சட்டத்தை நிறைவேற்றி 30 ஆண்டுகள் கழிந்துவிட்டன. ஆகவே காலத்திற்கு ஏற்றபடி இதை மாற்றி அமைக்க வேண்டுமென்ற எண்ணம் சர்க்காருக்கு நீண்ட காலமாக இருந்தது. இதை இரண்டு—மூன்று ஆண்டுகளுக்கு முன்பே தயாரித்துக் கொண்டு வந்திருக்க முடியும். இடையில் மத்திய சர்க்கார் அடிக்கடி கூட்டுறவு சம்பந்தமாக அவர்களுடைய அபிப்பிராயங்களைச் சொல்லிக்கொண்டு வந்ததாலும், அதற்காக ஒரு தனிக் கமிட்டி போட்டுப் பரிசீலனை செய்ததாலும், சட்டத்தை ஏற்படுத்த ஒரு மாடல் பில் தயாரித்ததாலும், அதையெல்லாம் பார்த்துப் பிறகு சட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்பதற்காக சற்றுத் தாமதப் படுத்தியிருந்தோம். ராஜ்ய சர்க்கார் சென்ற ஆண்டு இந்தச் சட்டத்தைத் தயாரித்து, இந்தச் சபையின் முன்பு வைத்து, அதை ஒரு ஆய்வுக் குழுவிற்கு அனுப்பினார்கள். அந்த ஆய்வுக் குழு இதை நன்றாகப் பரிசீலனை செய்து தன்னுடைய அறிக்கையை சமர்ப்பித்திருக்கிறது. சாதாரணமாக ஆய்வுக் குழுவின் அறிக்கையைச் சமர்ப்பிக்கும்போது ஆய்வுக்குழு என்னென்ன திருத்தங்கள் செய்தது என்று சொல்லுவது வழக்கம். ஆய்வுக் குழு செய்திருக்கிற திருத்தங்களெல்லாம் அறிக்கையிலேயே கொடுக்கப் பட்டிருக்கின்றன. ஆகையால், அதைப்பற்றி விவரிக்காமல், இப்போது செய்திருக்கிற சட்டம் எந்தெந்த முறையில் முற்போக்கு வாய்ந்தது என்று நான் விளக்குவதற்கு முன்வருகிறேன்.

இப்போது இருக்கக் கூடிய சட்டத்தை விட நாம் கொண்டு வந்திருக்கிற மசோதா பல முன்னேற்றகரமான திட்டங்களைக் கொண்டதாக இருக்கிறது. அவைகளைப் பற்றி எல்லாம் இப்போது நான் சற்று எடுத்துச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.